**இலங்கை தர நிர்ணய நிறுவனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும்விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின்காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடியபொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடியஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடிஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டுமதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கம் செய்யப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

  வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நாக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் யவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள்,ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகையமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனையஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட படிவம்சார் | 2017 முதல் 2020 வரையான காலத்திற்கு உரிய | அட்டுறு அடிப்படையின் |

| | | | |
|---|---|---|---|
| | சட்டகத்தின் 17 பிரகாரம் ஏதேனும் கணக்கீட்டு நிறுவனத்தில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களினூடாக பொருளாதார வளங்களிற்கு ஏற்படும் தாக்கம் நிதிரீதியான பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் இடம்பெறும் காலத்திலல்லாது குறித்த தாக்கம் இடம்பெற்ற காலத்திற்கு இனங்காண வேண்டிய போதும் நிறுவனத்தால் அதற்கு முறனாக 2017 முதல் 2020 வரையான ஆண்டுகளிற்குரியதாக கிடைத்த ரூபா 28,930,236 யை திரண்ட இலாபத்திற்கு செம்மையாக்காது 2021 ஆண்டின் வருமானமாக காட்டிய காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் அந்த அளவால் கூடுதலாக கணக்குகளில் காட்டப்பட்டடிருந்தன. அவ்வாறே வருமானத்துடன் தொடர்பான காலத்தை குறிப்பாக இனங்காணாத காரணத்தால் அவ்வருமானமும் உரிய முறையில் அந்த அந்த ஆண்டிற்குரியாக செம்மையாக்க முடியாதிருந்த சந்தர்ப்பங்களும் மாதிரி பரசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. | இனங்காணாத வைப்புக்களை 2021 ஆண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேவையான தகலவ்களை இனங்காண்பதற்கு செலவிடப்படும் காலம் காரணமாக அது தாமதித்துள்ளது. 2022 ஜூலை மாதத்தில் புதிய கணக்கீட்டு தொகுதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் இப்பிரச்சினை தீருமென தயவுடன் கவனிக்கவும். | பிரகாரம் கணக்கீடு செய்ய வேண்டியதால் ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவுகள் மாத்திரம் இலாபம் அல்லது நட்டம் கணக்கிடலின் போது கவனத்திற் கொள்ள வேண்டும். ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவுகளை தெளிவாகவும் சரியாகவும் இனங்காண முடியுமான வகையில் பொருத்தமான உள்ளக மற்றும் கணக்கீட்டுத் தொகுதியொன்றை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 பிரகாரம் இருப்பு, கிரயம் அல்லது தேறிய பெறுமானம் ஆகிய பெறுமானங்களின் குறைந்த பெறுமானத்தில் காட்ட வேண்டிய போதும் நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 1,511,063 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் பொருத்துக்களை கிரய அடிப்படையில் காட்டப்பட்டிருந்தன. இவ் உபகரணங்கள் மற்றும் பொருத்துக்களை பட்டியற்படுத்தப்படாதமை மற்றும் இருப்பு கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமை காரணமாக அதன் நிலையான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | நிறுவன ஆரம்பம் முதலே நிலவும் விதத்தில், முதற் கிடைப்பனவு முதல் விநியோகம் முறையை பயன்படுத்தி பொருத்துக்கள் மற்றும் உபகரண இருப்புக்களின் விலைகள் மதிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2022 மே மாதம் மேற்கொள்ளப்பட்ட 2021 கணிப்பீட்டு சபையின் கீழ் இந்த பொருத்துக்கள் மற்றும் உபகரணங்களை ஒப்பாய்வு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | இருப்புக்களை பெறுமதியிடும் கணக்கீட்டு நியமம் பிரகாரம் இருப்புக் கிரயம் அல்லது தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமானத்திற்கு பெறுமதியிட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 37 பிரிவு பிரகாரம் சொத்தக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை | தொலைபேசி, கனணி மற்றும் பிரசுர இயந்திரங்கள் ஒரே பேரேட்டு கணக்கின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ள | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்தக்கள், பொறிகள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | வகைப்படுத்துகையில் அச் சொத்துக்களின் சமமான தன்மை மற்றும் பாவனையை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். எனினும் வேறு 02 விகிதங்களின் கீழ் பெறுமானத் தேய்விடப்படும் அதாவது தேய்மான விகிதம் 10 சதவீதமான அலுவலக உபகரணங்கள் மற்றும் தேய்மான விகிதம் 20 சதவீதமான கனணி பிரசுர இயந்திரங்கள் மற்றும் கையடக்க தொலைபேசி ஆகிய 02 வகைகளும் சொத்துக்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களில் அலுவலக உபகரணத்தின் கீழ் இறுதி நிதிக்கூற்றில் வெளிப்படுத்தி உள்ளதுடன் தேய்மானம் சரியாக கணக்கிடப்பட்டள்ளதாக அவதானிக்கப்பட்டது. | போதும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை ஒவ்வொறு வகைக்கும் வெவ்வேறாக பேணப்படுவது ஒவ்வொறு வகைகளினதும் தனிப் பெறுமானம் மற்றும் தேய்வானத்தை காட்டவே. பெறுமானத் தேய்வு கணக்கிடல் நிலையான சொத்து பதிவேட்டின் பெறுமானங்களின் அடிப்படையிலாகும். | உபகரணங்களை வகைப்படுத்துகையில் சொத்துக்களின் சமமான தன்மை மற்றும் பாவனையயை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 பிரிவு பிரகாரம் சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட்காலத்தை குறைத்து ஒவ்வொறு வருடாந்த அறிக்கையிடும் கால முடிவு திகதியில் மீளாய்வு செய்ய வேண்டிய போதும் நிறுவனத்தினால் சொத்துக்களின் ஆயட்காலத்தை நியாயமாக மதிப்பிட்டிருக்காததுடன் கொண்டு செல்லும் பெறுமானம் பூச்சியமான கிரயம் ரூபா 620,306,802 ஆன சொத்துக்கள் அதற்கு அப்பாலும் பயன்படுத்துவது அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக அச் சொத்துக்களிற்காக அச் சொத்துக்களிற்காக தேய்வானம் கணக்கிடப்பட்டிருக்காததுடன் நடைமுறை ஆண்டின் மிகை அந்த அளவால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | வாகனங்கள் தவிர முழுமையாக தேய்வடைந்த சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய மீள்மதிப்பீட்டு செயன்முறை தொடர்பாக நிர்வாகப் பிரிவு அறிவூட்டப்பட்டது. வாகனங்களை மீள் மதிப்பீடு செய்து இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம், பயன்படுத்தப்படும் சொத்தக்களை மீள்மதிப்பீடு செய்யவும் அல்லது ஆயட்காலத்தை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 39 பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கடன்படுனர் மீதிகளை அதன் காலக் கழிவு செய்த பெறுமானத்தில் காட்ட வேண்டிய போதும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலவிய 08 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் ரூபா 32,760,484 ஆன 354 கடன்படுனர் மீதிகளிற்காக குறைபாட்டு சோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு கொண்டு செல்லும் பெறுமதியை | நிலுவை கடனிற்காக கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் இதுவரை 18 கடன்படுனர்களுடன் கூடிய ரூபா 707,496 தொகை சேகரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொறு பிரிவிலும் கடன்படுனர்களிற்காக தனியான கோவைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறே இந்த கடன்படுனர் மீதியை அறவிட நிறுவனத்தால் திருப்திகரமான செயன்முறையை எடுத்திருக்கவில்லை. | கடன்படுனர் மீதிகளிற்காக காலக்கழி பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கபடும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றுடன் இனங்காணாத செலவு ரூபா 21,467,694 இனை செம்மையாக்குவதன் பின்னர் காசு புத்தகத்தின் பிரகாரம் மீதியை பெற்றிருந்ததுடன் அவ் இனங்காணாத செலவுப் பெறுமதியின் விரிவான குறிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. வங்கியிற்கு நேரடியாக கிடைக்கும் வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நிலவும் முறைமையில் காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் காரணமாக 2018 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை இனங்காணாத செலவினம் ரூபா 23,158,472 தொகை நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக தவிசாளர் மற்றும் பிரிவுத் தலைவர்கள் சமூகமலித்து நீலமாகக் கலந்துரையாடி இனங்காணப்படாத நேரடி வைப்புக்களை இனங்காண்பதற்கு அனைத்து பிரிவுகளினதும் ஒத்துழைப்பை தேடிப்பார்த்ததுடன் பிரிவுகளிலிருந்து தேவையான தகவல்கள் கணக்கு பிரிவிற்கு தாமதமின்றி அனுப்பும் செயல்முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. | வங்கி இணக்கக் கூற்றொன்றை தயாரிக்கும் நோக்கத்தை அடைந்து கொள்ள இயலுமானவாறு சரியாக தெலிவாக மற்றும் தேவையான விபரங்களை உள்ளடக்கி வங்கி இணக்கக் கூற்றொன்றை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 திகதிக்கு நிறுவனத்திற்கு சொந்தமாக ரூபா 6,826,312 பெறுமதியான மென்பொருட்கள் காணப்படுவதுடன் அம் மென்பொருட்களை பெருமானத் தேய்விடும் தேய்மான வீகிதத்தை நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை. | கணனி மென்பொருல் பெருமானத் தேய்வு விகிதம் நூற்றுக்கு 10 ஆனதுடன் அதனை எதிர்வரும் நிதி ஆண்டில் (2022) காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவையான தகவல்ளை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தின் கணக்கு கூற்றுக்கள் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமாக நிலவும் டொலர் 22,820 கணக்கில் 2021/12/31 திகதியன்று மீதி ரூபா 4,511,375 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அத்திகதிக்கு USD 1 இன் பரிமாற்று விகிதம் ரூபா 197 ஆக எடுக்கப்பட்டிருந்தது. எனினும் அத்திகதியில் நிலவிய டொலர் பரிமாற்று விகிதம் ரூபா 202 ஆன காரணத்தால் டொலர் கணக்கின் பெறுமதி ரூபா 119,059 இனை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தினசரி டொலர் பரிமாற்று விகிதம் பிரகாரம் டொலர் கணக்கு பேணிச் செல்லப்படுவதுடன் எல்லா கொடுக்கல் வாங்ககல்களும் அவ் விகித பிரகாரம் கணக்கீடு செய்யப்படுகின்றது. இந்த முறை பிரகாரம் கணக்கு ஆண்டு இறுதி திகதிக்கு உள்ள பரிமாற்று விகிதத்தை கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. | LKAS 21 இன் 23 பிரிவு பிரகாரம் வெளிநாட்டு நாணய மீதி, காலப்பகுதி இறுதியில் நிலவிய அன்னிய செலாவனி விகிதம் பிரகாரம் பரிமாற்றப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------

### 1.6.1 பெற வேண்டிய தொகை

------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------ | ---------------------------- | -------------- |
| (அ) | ஏனைய கடன்படுனர் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,076,419 ஆனதுடன் அவற்றுள் கூட்டுத் தொகை ரூபா 727,791 ஆன 03 மீதிகள் 04 ஆண்களை விஞ்சிய காலம் முதல் நிலவியதுடன் இம் மீதிகளை அறவிட போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நுகர்வோர் நடவடிக்கை அதிகார சபையிளிலிருந்து அறவிட வேண்டிய தொகை தொடர்பாக கோரிக்கை கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. வரையறுக்கப்பட்ட Allianz Insurance and Insurance Corporation இடமிருந்து அறவிடப்பட வெண்டிய ஏனைய இரண்டு இரண்டு மீதிகளை காலாவதியான காரணத்தால் நிறுவனத்தின் உரிமை செலுத்துதலை நிராகரித்துள்ளது. சபையின் அங்கிகாரத்தை பெற்று இவைகளை கணக்குகளிலிருந்து பதிவலழிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | பெற வேண்டிய தொகையை விரைவில் அறவிட அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2015 முதல் 2021 வரையான காலத்தில் இருந்து நிலவிவரும் 08 தனியார் நிறுவனங்களிற்கு வழங்கியிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 416,052.32 ஆன மீதியை தீர்ப்பதற்கு நிறுவனத்தினால் செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. | குறித்த பணிப்பாளர்களுக்கு அவர்களது பிரிவின் செலுத்தாத முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவூட்டப்பட்டது. | தனியார் நிறுவனங்களிற்கு வழங்கியிருந்த பணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.3 பந்தி | காதிதாதிகள், மின் உருப்படிகள், மோடார் வாகன பழுதுபார்த்தல், பருவகால சஞ்சிகை மற்றும் பிரசுரம் போன்ற விஷேட வகைகளின் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கக்கூடிய வழங்குனர்களின் பெயர் பட்டியலொன்றை தயாரிக்க வேண்டியதுடன் விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கொள்வனவு செய்கையில் பெறுகை நிறுவனத்தினால் அப் பட்டியலில் குறிப்பிடப்படும் நிறுவனங்களிற்கு மாத்திரம் மட்டுப்பட வேண்டுமென ஏற்பாடு செய்யப்படுள்ள போதும் நிறுவனம் மின் உருப்படிகளுக்காக வழங்குனர்களை பதிவு செய்திருக்கவில்லை. அவ்வாறே பதிவு செய்யப்பட்ட வழங்குனர் பட்டியலை ஆண்டிற்கு ஒரு முறையாவது நாளாதுவரையாக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் தர நிர்ணய நிறுவனத்தினால் பேணிச் செல்லும் பதிவேடு 2019 ஆண்டிற்குரிய ஒன்றாவதுடன் கணக்காய்வு திகதிய 2022 பெப்ரவரி 15 திகதி வரையும் நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் கொள்வனவு செய்கையில் 2019 ஆண்டின் வழங்குனர்களின் பட்டியல் மற்றும் தொலைபேசி பெயர் பட்டியலில் குறிப்பிடப்படும் வழங்குனர்களின் பட்டியலும் பயன்படுத்தப்பட்டன. 2022 ஆண்டிற்கு வழங்குனர்களை பதிவு செய்ய ஆரம்பித்துள்ளதுடன் தற்போது வழங்குனர்களின் பட்டியல் வேலைகள் பூர்த்தி செய்யப்படுகின்றது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |
| (ஆ) | 2015 மே 25 திகதிய பொது முயற்சிகள் | குழு போக்குவரத்து வசதிகளை | கொரோனா தொற்று காலத்தில் இந்த | சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கை இலக்கம் 1/2015 இன் 4.1 பந்தி மற்றும் நிதிப் பிரமாணக் கோவையின் இலக்கம் 780 பிரமாணம். | வழங்குகையில் கிரயம் தொடர்பாகவும் கவனித்து தொகுதி வாகனங்கள் மூலம் குழு போக்குவரத்தை வழங்க வேண்டிய போதும் அப் பிரமாணங்களுக்கு முறனாக 80 மத்திய நிலை அலுவலர்களை போக்குவரத்து செய்ய கெப் வண்டி சேவையை வழங்கும் தனியார் நிறுவனமொன்றின் மூலம் (Cab service) 09 வாகனங்களை பயன்படுத்தியுள்ளதுடன் அதற்காக 2020 ஜுன் 15 திகதி முதல் 2022 ஏப்ரல் கணக்காய்வு திகதி வரை ரூபா 36,593,576 தொகை குறித்த தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தன. | மத்திய நிலை அலுவர்களை மற்றும் ஏனைய அனைத்து ஆளணியினரையும் குழுவாக போக்குவரத்து செய்ய இந்த வாகனங்களை சில மாதங்களாக பயன்படுத்தப்பட்டன. போக்குவரத்து கிரயம் அதிகரித்துள்ள போதும், அன்றாட வேலைகளுக்காக அனைத்து ஆளணியினரையும் சுகாதார பாதுகாப்புடன் போக்குவரத்து செய்யவதனூடாக நிறவனத்திற்கு தனது சேவையை வினைத்திறனாக வரவேற்கத்தக்க மட்டத்தில் பேணிக்கொள்ள முடியுமானதுடன் தயவுடன் கவனிக்கவும். | இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 56,623,886 ஆன மிகை ஒன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 69,969,182 தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 13,345,296 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்பாட்டுச் வருமானம் ரூபா 106,375,031 இனால் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டு செலவினம் ரூபா 118,392,315 இனால் அதிகரித்திருந்தமை முக்கியமான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் கனிசமான இருப்பின் அளவு மற்றும் பௌதீக இருப்பு உள்ளடங்கிய இருப்பு கணிப்பீட்டு | இருப்புக் கட்டுப்பாடும் உள்ளடங்கும் வகையில் புதிய கணக்கு | இருப்புகளிற்காக போதிய உள்ளக கட்டுப்பாடொன்றை |

| | | |
|---|---|---|
| அறிக்கை பரிசோரனையின் போது ரூபா 694,140 பெறுமதியான இருப்பு உருப்படிகள் புத்தகங்களில் குறிப்பிடப்படாமை மற்றும் ரூபா 758,442 பெறுமதியான இருப்பு உருப்படிகளின் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டன. | தொகுதியொன்று தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் நிறுவனத்தில் இவ்வாறான முறன்கள் குறைவடையும். | அமுலாக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1984 இலக்கம் 6 கொண்ட இலங்கை தர நிர்ணய நிறுவன சட்டத்தின் 3 (அ) மற்றும் (ஓ) பிரிவு பிரகாரம் வடிவமைப்பு வியாபார பொருட்கள், உற்பத்தி பொருட்கள், விவகாரம் மற்றும் செயன்முறை தொடர்பாக தேசிய மற்றும் உள்நாட்டு அடிப்படையில் வழங்கப்படும் தரத்தை பொதுவாக ஏற்றுக்கொள்வதை மேம்படுத்தல் மற்றும் நிலைமையை உறுதி செய்தல் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் நோக்கமாகும். இதன் பிரகாரம் SLS இலட்சினையை பயன்படுத்த அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்கும் போது எப்போதும், உற்பத்தி உரிய இலங்கை தர நிர்ணயத்திற்கு இணங்குவதை உறுதி செய்யவும், தரத் தொகுதியை திருப்திகரமாக செயற்படுத்துதல் மற்றும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக திறந்த போட்டிச் சந்தையிலிருந்து உற்பத்தியின் மாதிரியை பெற்று அளவுத்திட்டங்களிற்கு இணங்குவதை பரிசோதிப்பதற்கு பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், கடந்த 05 வருட காலத்தினுள் நிறுவனத்தினால் மேற்கொண்ட சந்தை பரிசோதனைகளின் அளவு, இலங்கை தர நிர்ணய சான்றிதழ் இலட்சினை வழங்கிய அளவிற்கு ஒப்பாக 3.3 சதவீதத்திற்கும் 6.2 சதவீதத்திற்கும் இடையிலான ஆகக் குறைந்த மட்டத்தில் நிலவின. | உற்பத்திகளின் சந்தை விலைகள் அதிகரித்தல், உற்பத்தியாளரின் வளவில் பரிசோதிக்க நேரிடல் மற்றும் சந்தையில் அடிக்கடி பெற்றுக் கொள்ள முடியாமை, சில பிரதேசங்கள்/வலயங்க ளில் மாத்திரம் மற்றும் உற்பத்தி செய்வது தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களுக் கு மாத்திரமாதல் போன்ற எல்லைகளுடன், கடந்த ஆண்டினுள் நிறுவனத்தினால் சந்தை மாதிரிகளை பெற்று பரிசோதித்ததுடன் எதிர்காலத்தில் மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் அளவை அதிகரிக்க திட்டமிடப்பட்டள்ளது. | போதியளவான சந்தை பரிசோதனைகளை மேற்கொள்வதனூடாக SLS இலட்சினையுடன் கூடிய பொருட்களின் உரிய தரத்தை அதன் பிகாரமே உள்ளதா என நுகர்வோர்களுக்கு உறுதி செய்தல் மற்றும் அதனூடாக ளுடுளு இலட்சினை தொடர்பாக நுகர்வோர் நம்பிக்கையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாதிரி பரிசோதனையின் போது எதிர்பார்த்த நியமங்களுக்கு இணங்காததன் காரணமாக இறக்குமதி இருப்பு நிராகரிக்கப்பட்டிருந்தது. ஒன்றுசேர்ந்த 1,196,940 கிலோ கிராம் தொடர்பாக இருப்பு மாதிரிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் நிராகரித்தற் கடிதம் வழங்கல் 34 நாட்களிற்கும் 256 நாட்களிற்குமிடையிலான கால வீச்சளவு | அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியினுள் டின் மீன்களிலுள்ள ஆசனிக் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாட இறக்குமதியாளர்கள் உயர் அதிகாரிகளுடன் பல | நிராகறிக்கப்பட்ட பண்டங்கள் தொடர்பாக செய்ய வேண்டிய முன் நடவடிக்கைகள் ஏனைய தொடர்படைய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து விரைவில் முடிவுறுத்த |

| | | |
|---|---|---|
| கடந்திருந்த 27 சந்தர்ப்பங்கள் ஆவணப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. | கலந்துரையாடல்களை நடாத்தும் காரணத்தால் தள்ளுபடி கடிதத்தை தாமதிக்குமாறு கோரப்பட்டிருந்தது. 2020-09-15 திகதியின் பின்னர் கிடைத்த டின் மீன் இருப்பு RCT கொட்டிலில் நிறுத்தி வைக்கப்படடிருந்ததுடன் அவை இறக்குமதியாளர்களின் களஞ்சியத்திற்கு அனுப்பப்படாததுடன் அங்கீகாரம் அல்லது நிராகரிக்க பரிந்துரைக்க முன்னர் தேசிய சந்தைக்கு விடுவிக்க சந்தர்ப்பம் இல்லை. | வேண்டும். |

**3.3 சர்ச்சை தன்மையான கொடுக்கல் வாங்கல்கல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 திகதியன்று ஆரம்பநிலை சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 65 மற்றும் உள்ளவாறான ஆளணி 44 ஆனதுடன் வெற்றிடங்கள் 21 ஆக காணப்பட்டன. ஆரம்பநிலை வகையின் வெற்றிடங்கள் 21 ஆன போதும் அங்கீகாரிக்ப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விஞ்சி தனியார் நிறுவனமொன்றினால் அலுவலக கடமை உதவியாளர் சேவைக்காக உரிய அங்கீகாரமின்றி ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்கள் 40 இற்கும் 50 இற்குமிடையிலான எண்ணிக்கையினருக்காக கூட்டுப் பெறுமதி ரூபா 8,284,029 செலுத்தப்பட்டிருந்தது. | ஆரம்ப காலத்தில் இதற்காக பொதுச் சபை அங்கீகாரத்தை பெற்றிருந்த போதும் அது தொடர்பான அறிக்கையை தற்போது கண்டறிய முடியாதுள்ளது. இதன் காரணமாக பொதுச் சபைக்கு விடயங்களை சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. ஆய்வு கூடம் மற்றும் ஏனைய பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் மற்றும் வேறு சேவைகள் விரிவாளதால் அலுவலக கடமை உதவியாலர்களின் சேவை அதிகமாக நிறுவனத்திற்கு தேவைப்பட்டிருந்தது. இதன் காரணமாக முன்னர் குறிப்பிட்டவாறு வருடாந்த டென்டர் கோரி துப்பரவு செய்யும் வேலைகளிற்காக மற்றும் அலுவலக கடமை உதவியாலர் நடவடிக்கைக்காக வெளி ஊழியர்களினது சேவை பெறப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட உழியர் எண்ணிக்கையை விஞ்சி ஊழியர்களை ஆட்சேர்க்க முடியாது. மேலதிக ஊழியர்கள் தேவையென்றால் ஆட்சேர்புத் திட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு முறையானவாறு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெஸ்டா மற்றும் நூட்ல்ஸ் இறக்குமதி செய்யும் போது இறக்குமதி பண்டங்களை பரிசோதனை செய்வது தொடர்பான வழிகாட்டியின் 1.1.4 பிரகாரம் பண்டக பரிசோதனை அறிக்கை கிடைக்க முன்னர் இறக்குமதிதாரரினால் களஞ்சியத்திற்கு பண்டங்களை விடிவித்துக் கொள்ள வேண்டுமெனில் இறக்கமதிதாரரிடமிருந்து தனியார் உத்தரவாத சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ள வெண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே இறக்கமதி பண்டங்களை பரிசோதிக்கும் பொது பரிசோதனை பெறுபேறு கிடைக்க முன்னர் 67,160 கிலோ கிராம் டின் மீன்களும் 402,486 கிலோ கிராம் நூட்ல்ஸ் மற்றும் பெஸ்டா ஆன இருப்புக்கள் இறக்குமதிதாரரின் களஞ்சியத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு இருப்பை விடுவிக்கும் போது அப் பண்டங்களில் பரிசோதனை பெறுபேறு கிடைக்க முன்னர் இப்பண்டங்கள் சந்தைக்கு விடுவிக்கப்படும் அபாயமொன்று நிலவியதாக அவதானிக்கப்பட்டது. | பெஸ்டா மற்றும் நூட்ல்ஸ் வகை 5 இன் கீழ் இறக்குமதி செய்யப்படுவதுடன் ஒவ்வொரு இருப்பிலிருந்தும் மாதிரி RCT கொட்டிலிருந்து பெறப்படும். துறைமுகத்தில் மற்றும் RCT இல் மேற்கொள்ளப்படும் அதிக தாமத கிரயம் காரணமால் “விற்பனைக்கு அனுமதியில்லை” நிலைமையை காட்டும் சின்னத்துடனான மாதிரியின் பின்னர் இருப்புக்கள் இறக்குமதிதாரரின் களஞ்சியத்திற்கு விடுவிக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் உற்பத்தி முகவர்கள் RCT அலுவலகத்திற்கு பிணைமுறிக் கடிதத்தை சமர்பிக்கின்ற போதும் தற்போதைய இறக்குமதி பரிசோதனை செயற் திட்டத்தின் பிரகாரம் அது அத்தியவஷிமற்றது. இவ்வகை குறைந்த அபாயமுடைய உற்பத்தியாவதுடன் அதன் காரணமாக கடந்த 10 ஆண்டுகளினுள் புறக்கணிப்புக்கள் அவதானிக்கப்படவில்லை என தயவுடன் கவனிக்கவும். | நிறுவனத்தின் பண்டக பரிசோதனை தொடர்பான வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். நுகர்வோர்களுக்கு தரமான பண்டலெமான்று பெற்றுக் கொடுப்பது தொடர்பாக தர நிர்ணய நிறுவனத்தின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் நிறுவன கொள்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | அரசாங்க வேலைகள் மற்றும் சேவைகளை நிறைவேற்றும் போது சிக்கனத்துடன் மற்றும் வினைத்திறனுடன் அவற்றை நிறைவேற்றுவது தொடர்பாக கவனமெடுத்து கிரயம் முறைகின்ற வகையில் உடன்பட்டிருந்த போதும் நிறுவனத்தினால் அதற்கு இணங்காதவாறு போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரமின்றி வாடகை அடிப்படையில் இரண்டு வேண் வண்டிகளை பெற்றுக் கொள்ள இரண்டு வழங்குனர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இலங்கை தர நிர்ணய | 1980 தசாப்தம் முதல் அரச நிதிப்பிரமாணம் மற்றும் பெறுகைகள் வழிகாட்டியிற்கு இணங்க வாடகை வாகனங்களை பெற்றுக் கொள்வதுடன் இதற்காக முதலாவதாக 1987 ஆண்டின் கட்டுப்பாட்டுச் சபை கூட்டமொன்றின் போது பெறப்பட்ட முன்கூடிய அங்கீகாரமொன்று குறிப்பிடப்படுவதுடன் அவ்வறிக்கையில் மூலப் பிரதியை கண்டறிய கடினமாகவுள்ளது. எதிர்வரும் பொதுச் சபை கூட்டத்திற்கு புதிகாக விடயங்களை முன்வைத்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை | நிறுவன நோக்கங்களை அடைந்து கொள்ளும் போது அவ்வப்போது விதிக்கப்படும் அரச சட்ட திட்டங்களுக்கு இணங்க வேண்டும். செலவு மேற்கொள்ளும் போது அவை சிக்கன மற்றும் வினைத்திறனாக வேண்டும். கொடுப்பனவு சரியென குறித்த அலுவலர்களினால் உறுதி செய்யும் போது அச் செலவுகளின் |

| | | |
|---|---|---|
| நிறுவனத்திற்கு சொந்தமான செலுத்த முடியுமான நிலையிலுள்ள 06 வேண் வண்டிகள், 03 கெப் வண்டிகள் மற்றும் 03 மோடார் வண்டிகள் உள்ள போதும் மிகத் தொலைதூர பிரயாணங்களிற்கு இந்த இரண்டு வேண் வண்டிகளையும் ஈடுவடுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டில் 07 மாத காலங்களிற்காக ரூபா 3,629,670 வான செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 ஜுன் மாதத்திற்காக கட்டணம் செலுத்தும் போது ஒரு வாகனத்திற்காக ரூபா 144,806 ஆன தொகையை கூடுதலா செலுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்படும். தற்போது நிறவனத்திடமுள்ள வாகன தொகுதி மற்றும் சாரதிகளின் அளவு குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன் புதிய வாகனங்களை கொள்வனவு செய்யவும் அனுமதியில்லை. ஊழளனை-19 ீயனெநஅஉை நிலைமையை அடிப்படையாகக் கொண்டு சேவைக்கு வரவழைக்கும் அனைத்து ஊழியர்களுக்கும் போக்குவரத்து வசதிகளை வழங்க அரசாங்கத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | உள்ளடக்கம் குறித்த துணை பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளுடன் ஒப்பிட்டு பரிசோதிக்க வேண்டும. |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை தர நிர்ணய நிறுவனத்தில் ஆயுகூடம் ஒன்றை பேணிச்செல்ல கொழும்பில் அமைந்துள்ள மூன்று மாடி கட்டிடமொன்று 2021 செப்தம்பர் 01 திகதி முதல் 2023 ஆகஸ்ட் 31 திகதி வரை 02 வருட காலத்திற்காக மாதமொன்றிற்கு ரூபா 950,000 செலுத்த குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த போதும் அங்கு அரச பெறுகைகள் வழிகாட்டி கேவையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | 2021-02-03 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் ஒன்றின் மூலம் மேற்குறிப்பிட்ட கட்டிடத்தை குத்தகைக்கு வழங்க டென்டர் கோரியதுடன் பெறுகைகள் குழு ஒன்றினூடாக டென்டர் திறந்து சபையின் அங்கீகாரத்தை பெற்று மாதாந்த குத்தகை அடிப்படையின் மீது கட்டிடம் பெறப்பட்டது. | பெறுகைகள் செயற்பாடுகளின் போது உரிய வாறு பெறுகைகள் வழிகாட்டி கேவையிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 மனித வள மகாமைத்தவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 பெப்ரவரி 20 ஆம் திகதிய இலக்கம் EST-4/2/REM/01/9 கொண்ட ஓய்வு பெற்ற அலுவலர்கள் மீள் ஆட்சேர்ப்பது தொடர்பான பொது நிருவாக சுற்றறிக்கை அரச கூட்டுத்தாபனத்திற்கு பொருந்தாத பின்னனியில் நிறுவனத்தின் ஆட்சேர்ப்புத் | இந்த ஆட்சேர்ப்பு பொது திறைசேரி அங்கீகாரம் மற்றும் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முகாமைத்துவ திணைக்களத்திற்கு | அனைத்த ஊழியர் ஆட்சேர்ப்பும், ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் மற்றும் பொது திறைசேரியின் அங்கிகாரத்துடனும் ஏனைய தொடர்புடைய சுற்றிக்கை ஏற்பாடுகள் |

| | | |
|---|---|---|
| திட்டத்திற்கு மாற்றமாக வயது 60 வருடங்களை விஞ்சிய அரச சேவையின் ஓய்வுப் பெற்ற அலுவலர் ஒருவர் ஓராண்டு காலத்திற்காக பணிப்பாளர் (நிருவாக) பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.<br>02/2020 முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்புதும்/வெற்றிட நிரப்புதலின் பின்னர் அதற்குரிய தகவல்கள் முகாமைத்துவ சேவை திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே 2003 ஜுன் 02 ஆம் திகதிய பொது முயற்ச்சிக்கல் சுற்றறிக்கையின் இலக்கம் 22 இன் 9.10 பிரகாரம் ஒப்பந்த, அமைய அல்லது ஏனைய முறையில் செய்யப்படும் ஆட்சேர்ப்புகளிற்கு திறைசேரி செயளாலரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதும் இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக உரிய அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. | இதுவொறு நிரந்தர நியமனமல்லாததால் அறிவிக்கப்படவில்லை. எனினும் இதன் பின்னர் மேற்கொண்டுள்ள ஆட்சேர்ப்புக்கள் முகாமைத்துவ திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதால் எதிர்வரும் ஆட்சேர்ப்புக்களின் போதும் தகவல்களை சரியாக அறிக்கையிடலை சரியாக மேற்கொள்ளப்படும். | பிரகாரமும் மேற்கொள்ளப்பட வேண்டும். |